# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஏப்ரல் 10, 2021 Weekly E-paper • April 10, 2021




# அவை தற்செயலானவை அல்ல!

சுப.வீரபாண்டியன்

## அரக்கோணம் படுகொலைகள்

சாரதா தேவி

## நினைவு கூர்வோம் ஏப்ரல் 14

தலையங்கம்

## ஐயா ஆனைமுத்து மறைந்தார்

குண.சந்திரசேகர்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஏப்ரல் 10, 2021 Weekly E-paper • April 10, 2021


# அவை தற்செயலானவை அல்ல!

## சுப.வீரபாண்டியன்

‘ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு’ என்று நம் ஊரில் ஒரு பழமொழி உண்டு. அது வடநாட்டுக் கட்சியான பாஜக வுக்குத் தெரிந்திருக்காது போலிருக்கிறது. அதனால் பொதுவாக இருந்த பலரை - புகழ் பெற்ற பலரை - எதிரிகளாக அவர்களே உருவாக்கிக் கொண்டார்கள்!



தேர்தல் நாளன்று நடிகர் விஜய் மிதிவண்டியில் வந்ததும், நடிகர் அஜித் கருப்பு சிவப்பு முகக்கவசம் அணிந்து வந்ததும், நடிகர் விஜய் சேதுபதி அளித்த பேட்டியும், அழுத்தமான செய்திகளை மக்களுக்குச் சொல்லின. அவை எல்லாம் தற்செயல் நிகழ்வுகள் என்று கூறிவிட முடியாது. தங்கள் நிலைப்பாட்டை குறிப்பாக அவர்கள் சொல்லியுள்ளனர் என்றே தோன்றுகிறது.

நடிகர் விஜய் ஒரு கோடீஸ்வரர், அவரால் பெட்ரோல் போட முடியாதா என்று கேட்கின்றனர். தாராளமாக முடியும். அன்று அவர் மிதிவண்டியில் வரும்போதே, அவரைச் சுற்றி நிறைய கார்கள் வரவே செய்தன. அவற்றுக்கெல்லாம் எரிபொருள் போடாமலா வந்திருப்பார்கள். எனினும், பெட்ரோல் விலை ஏறிக்கொண்டே போவதைத் தன் மிதிவண்டிப் பயணத்தால் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது மறைமுகமாகத் தன் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார் என்றே கருத வேண்டும்.



அவருடைய கோபத்திற்கு பெட்ரோல் விலை ஏற்றம் மட்டுமே காரணமாக இருந்திருக்கும் என்று முடிவு செய்துவிட முடியாது. அவரைப் பாஜகவும், மத்திய அரசும் தொடர்ந்து கோபப்படுத்திக் கொண்டே இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அவர் நடித்த திரைப்படம் ஒன்றில் அரசை விமர்சனம் செய்து சில உரையாடல்கள் வந்தன என்பதற்காக அவரைக் கடுமையாக எதிர்த்தனர். பிறகு அவர் ஜோசப் விஜய் என்று கண்டு பிடித்தனர்.

அது மட்டுமல்லாமல், ஒருமுறை அவர் நெய்வேலியில் படப்பிடிப்பில் இருந்தபோது, வருமானவரித் துறையினர் அங்கு சென்று, படப்பிடிப்பை நிறுத்திவிட்டு, அவரை சென்னை வரைக்கும் அழைத்து வந்து சோதனை நடத்துகிறோம் என்று தொல்லை செய்தனர். இறுதியில் ஒரு புதைபொருளையும் அவர்கள் கண்டுபிடிக்கவில்லை.

இத்தனை கோபமும் அவருள் இருக்கத்தானே செய்யும். தன் கோபத்தைத் தேர்தல் நாளில், ஒரு சிறு செயல் மூலம் இப்போது உலகிற்குத் தெரிவித்து விட்டார்.

நடிகர் அஜித் அணிந்துவந்த முகக் கவசமும், ஒருவிதமான குறியீடு என்றுதான் தோன்றுகிறது. கருப்பும் சிவப்பும் எந்தக் கட்சியின் குறியீடு என்று தமிழ்நாட்டில் உள்ள சின்னப் பிள்ளைக்கும் தெரியும்.

நடிகர் விஜய் சேதுபதி, மிக வெளிப்படையாகவே நேர்காணல் ஒன்றில், சாதி, மதச் சார்பில்லாத கட்சிக்குத்தான் நான் எப்போதும் வாக்களிப்பேன் என்றார். இதனை விடத் தெளிவாக எப்படிக் கூற முடியும்?



நடிகர் ராஜ்கிரண், எழுத்தாளர் பவா செல்லத்துரை போன்ற பொதுவானவர்கள் பலரும் கூட இம்முறை தங்களின் கருத்தை மறைக்காமல் வெளியிட்டனர்.

இன்றுவரையில் அறியாமல் இருந்தாலும், ‘ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு’ என்பதை மே 2 ஆம் தேதி பாஜகவினர் தெரிந்து கொள்வார்கள். ‘சேராத இடந்தனிலே சேர வேண்டாம்’ என்னும் பழமொழியை அதிமுகவினரும் அன்று புரிந்து கொள்வார்கள் . •

# அரக்கோணம் படுகொலைகள்

சாரதா தேவி

சாதி எனும் மன நோய் பிடித்தவர்கள் தண்ணீர் பிரிக்காத தனித்தனி தீவுகளாகவே வாழ்கிறார்கள். அவர்களது மனங்களோ புகைக்காமல் மண்டிய நுரையீரல்களாக சாதி நச்சால் அழுந்தி அழுகிக்கிடக்கின்றன.



தேர்தல் முடிந்த மறு நாளே அரங்கேறத் தொடங்கிவிட்டன சாதிய வன்மங்கள். சாதியாகவே பார்க்கப்படும் கட்சிகளைக் கடந்து இன்று பொதுக் கட்சியாக மக்களிடையே மாறிவரும் விடுதலைச் சிறுத்தைகளின் முன்னேற்றத்தைத் துளியும் விரும்பாத பிற்போக்கு அமைப்புகளும், கட்சிகளுமே இந்த மோதல்களின் பின்னணியில் உள்ளன என்பது தெளிவு.



வானூர், திருப்போரூர், அரக்கோணம் பகுதிகளில் “பானைச் சின்னத்துக்கா ஓட்டுக் கேட்டு வந்தீர்கள்?” என வன்மம் கக்கி உள்ளனர் சாதி வெறியர்கள்!

தி.மு.க வின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற “கலப்புத் திருமண நிதி உதவி உயர்த்தி வழங்கப்படும்” என்ற வாக்குறுதி கூட சாதி வெறியர்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்திவிட்டது. உங்கள் பெண்களைக் கீழ்சாதியினர் நாடகக் காதல் செய்ய தி.மு.க பணம் கொடுக்கிறது என்று காணொளி போட்டது பா.ஜ.க. அதை விசிறி விட்டார் பா.ம.க.வின் கட்சித் தலைவர் இராமதாசு. பல சுற்றுகள் வந்த அந்தக் காணொளியைப் போட்டவர் மீது வழக்கு தொடர்ந்து, அந்தக் காணொளியை நீக்கச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

உச்சபட்சமாக அரக்கோணத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் கௌதம சன்னாவிற்கு வாக்கு சேகரித்த தலித் சமூகத்து இளைஞர்களைக் கொலை செய்யுமளவிற்குப் போயிருக்கிறது இந்த வெறி.

தேர்தல் நெருங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்பாக அவசரக் கோலத்தில் வன்னியருக்கு 10.5% உள் ஒதுக்கீட்டைப் பெற்றோம் என தம் வன்னியப் பாசத்தைக் காட்டினர் பா.ம.கவின் அழிவுக்கு வித்திட்ட மருத்துவர் இராமதாசும் அவர் மகன் அன்புமணி இராமதாசும். காடுவெட்டி குருவின் இறப்புக்குப் பின் கலகலத்துப் போன அவர்களின் சாதிப் பாசத்தை மீட்க அவர்கள் போட்ட திட்டம்தான் அந்த உள் ஒதுக்கீடு.

ஆளும் அ.தி.மு.க.வினரே சொன்னது போல அது தற்காலிகமானது மட்டுமல்ல, சட்டப்பூர்வமானதும் அல்ல. அதைப் புரிந்துகொண்டவர்கள் பா.ம.க வை இந்தத் தேர்தலில் கட்டாயம் புறக்கணித்திருப்பார்கள். ஆனாலும் அவர்கள் ஓரிரு பத்தாண்டுகளாக விதைத்து வைத்திருக்கும் சாதியக் கொடு நஞ்சு இளைஞர்களின் மனதில் இருந்து அகலவில்லை. அந்த இளைஞர்களுக்கு இடஒதுக்கீடெல்லாம் கூட இரண்டாம் பட்சம்தான். அவர்கள் அக்கினிச் சட்டியில் பிறந்தவர்கள்; சத்திரிய வம்சத்தவர்கள்; இரத்தம் பார்க்கும் வாளுக்கு சொந்தக்காரர்கள் போன்ற முழக்கங்களே அவர்கள் மனநிலையைச் செதுக்கி உள்ளன.

பானைச் சின்னத்துக்கு வாக்குக் கேட்டுத்தான் பல ஊர்களில் உள்ளே நுழைய முடியவில்லை என்றில்லை. உதயசூரியன் சின்னத்துக்கு வாக்குக் கேட்டுக் கூட நீலக்கொடிகள் பல ஊர்களுக்கு உள்ளே நுழைய முடியவில்லை என்பதுதான் உண்மை. விடுதலைச் சிறுத்தைகளின் கொடிகளைப் பிடுங்கியும் உடைத்தும் போட்டு, தடுத்து நிறுத்தி உள்ளனர் சாதி வெறியர்கள்.

இவை தமிழ்ச்சமூகத்தில் சாதிச் சங்கங்களும், சாதிக் கட்சிகளும் எந்த அளவுக்குப் பட்டியலின மக்கள் மீதான வெறுப்பையும் வன்மத்தையும் வளர்த்து வந்திருக்கின்றன என்பதற்குச் சான்று.

அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட சோகனூரைச் சேர்ந்த, கொலையுண்ட அந்த இரண்டு இளைஞர்களும், படுகாயம் பட்டு சிகிச்சை பெற்று வரும் ஏனைய மூன்று பேரும் தேர்தல் பணிகளைச் சுறுசுறுப்பாக மேற்கொண்டது மட்டுமில்லை, மணல் கொள்ளையில் ஈடுபட்டிருந்த பெருமாள்பேட்டையைச் சேர்ந்த அ.தி.மு.க பிரமுகரிடமும் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். அவர்கள் அரசியல்மயப்படுவதும், அதிகாரத்தை நோக்கி நகர்வதும் தங்களுக்கு ஆபத்து என்று உணர்ந்த அந்த பிரமுகர் ஏவி விட்டே இந்தக் கொலைகள் நடந்திருப்பதாகச் செய்தியாளர்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

அ.தி.மு.க.வுடனும், பா.ம.க.வுடனும் கூட்டணியில் இருந்த புரட்சி பாரதம் அமைப்பின் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி இது சாதிய, அரசியல் கொலை அல்ல என்று சொல்லவைக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று வரை ஒரே குடும்பமாக ஓடோடி தேர்தலுக்காக உழைத்துக் கொண்டிருந்தவர்கள் இன்று தனித்தனிச் சமூகமாக நின்று குரல்கொடுப்பதா வேண்டாமா என்று கையைப் பிசைவதையும் பார்க்கமுடிகிறது.

சமூக ஒடுக்குமுறை மிக மிக ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றி உள்ள நிலத்தில் அதை அகற்ற நாம் அறிவாயுதங்களை முன்னும் பின்னுமாகவும், மேலும் கீழுமாகவும் எல்லா பக்கவாட்டுகளிலும் செலுத்தி நகர்த்த வேண்டியுள்ளது. ஓய்ந்துவிடாமல் அந்த நச்சு வேர்களை முற்றிலும் அகற்ற நம் அறிவாயுதங்களைத் தொடர்ந்து செலுத்துவோம்!

தன் வன்மையான கண்டனங்களைப் பதிவு செய்திருக்கும் வருங்கால முதல்வர் ஸ்டாலின் அவர்களின் ஆட்சி அமைந்ததும் சாதிய வன்கொடுமைகளைச் சட்ட ரீதியாக மட்டுமல்லாமல், பண்பாட்டு ரீதியாகவும் வென்றெடுப்போம்!

## எழுத்தாளர் இமையம்



இவ்வாண்டு ‘செல்லாக்காசு’ என்ற நாவலுக்காக 2021 ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் இமையம் அவ்விருது குறித்துச் சொல்லும் போது:

“இந்த விருதை நீதிக்கட்சியைத் தொடங்கிய தலைவர்களுக்கும், திராவிட இயக்கத் தலைவர்களுக்கும் சமர்ப்பிக்கிறேன். ஏனென்றால், அவர்களால்தான் நம்மண் நிமிர்ந்தது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், டாக்டர் அம்பேத்கர் ஆகியோருக்கு இந்த விருதைச் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இவர்கள் ஊட்டிய உணர்வுதான் என்னை எழுதவைக்கிறது. ஒடுக்கப்பட்டவர்களுக்காக வாதாட வைக்கிறது. இப்போது கூட கறுப்பு சிவப்பு கரைவேட்டி கட்டிக்கொண்டுதான் இருக்கிறேன்.” என்கிறார் உற்சாகமாக.

## சித்திரை தமிழ்ப் புத்தாண்டன்று!



“நித்திரையில் இருக்கும் தமிழா
சித்திரை அல்ல உனக்குத் தமிழ்ப் புத்தாண்டு
அண்டிப் பிழைக்க வந்த ஆரியர் கூட்டம் காட்டியதே
அறிவுக்கு ஒவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழருக்கு
தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு”

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## நினைவு கூர்வோம் ஏப்ரல் 14



தந்தை பெரியாரின் தோழரான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், மத்திய பிரதேசம், மாஹோவ் எனும் சிற்றூரில், தன் பெற்றோருக்குப் 14 ஆம் பிள்ளையாக 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று பிறந்தார்.

பரோடா மன்னர் ஷாயாஜி ராவ் உதவியினால் அமெரிக்கக் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புக்குச் சென்றார். அக்காலத்தில் அமெரிக்காவுக்குச் சென்ற முதல் இந்தியர் டாக்டர் அம்பேத்கர்.

இந்தியாவில் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, கல்விக்காகவும், சமூகநீதிக்காகவும் குரல் கொடுக்க 1926 ஏப்ரல் 1 ஆம் தேதி "பஹிஸ்கிருத ஹிதகாரிணி சபா" என்ற அமைப்பையும், 1955 இல் "பாரதீய பௌத்த மகாசபா" என்ற அமைப்பையும் உருவாக்கினார்.

1921 இல் இவர் எழுதிய "பிரிட்டீஷ் இந்தியாவில் அரசு நிதி பரவலாக்கல்" , 1923 இல் எழுதிய "ரூபாவின் பிரச்சனை " ஆகிய இரு நூல்கள் பிரிட்டீஷ் அரசின் விவாதத்திற்கு உள்ளானது என்றாலும், இந்தியாவில் ரிசர்வ் வங்கி அமைய அடித்தளமிட்டன அவை.

அமராவதி கோயில் நுழைவுப் போராட்டத்தை இறுதி செய்ய இந்திரா பவன் திரையரங்கில் பாரிஸ்டர் திக்கடே, கே.பி. தேஷ்முக், வழக்கறிஞர் சவ்பால், டி.ஆர் கவுலி போன்றோர் கூடிய மாநாட்டுக்குத் தலைமை ஏற்ற அம்பேத்கார், தீர்மானத்தை நிறைவேற்றினர். இந்தத் தீர்மானம் பல கோயில் நுழைவுப் போராட்டங்களை நடத்த வழிவகுத்து விட்டது.

1932 பிப்ரவரி 28 அன்று சென்னை வந்த டாக்டர் அம்பேத்கருக்குச் சென்னையில் எல்.சி.குருசாமியின் தலைமையிலான சென்னை அருந்ததியர் சங்கம், ஒடுக்கப்பட்டோர் பேரவை, கேரள தீண்டப்படாதோர் சங்கம், தீண்டப்படாதோர் இராணுவச் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள் வரவேற்பு அளித்தன. இப்பயணத்தில் தந்தை பெரியாரைச் சந்தித்து உரையாடிச் சென்றார் அண்ணல்.

"பாபா சாகேப் " என்ற பட்டத்தைப் புகழ் பெற்ற எழுத்தாளர் சி.பி. காயர் மோடே என்பவர் தன் நண்பர்களுடன் இணைந்து 1927 ஆம் ஆண்டு அம்பேத்கருக்குப் பட்டயமாக வழங்கினார். அப்பெயர் 1930க்குப் பிறகே நடைமுறைக்கு வந்தது.


சாதி ஒழிப்பு, சமத்துவம், பெண்ணுரிமை, சமூக நீதிக்காக எழுதியும், மேடைகளில் - சட்டமன்றங்களில் - இலண்டன் மூன்று வட்டமேசை மாநாடுகளில் பேசியும், போராட்டங்கள் நடத்தியும்,. மக்களுக்காக வாழ்ந்த மாமனிதர் அண்ணல் அம்பேத்கரை அவரின் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாள் நினைவில் ஏந்தி, வாழ்த்துவோம் !

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# ஐயா ஆனைமுத்து மறைந்தார்

## குண.சந்திரசேகர்



கடவுள் இல்லை, கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை என தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் முழங்கிய பெரியார் 95 வயது வரை வாழ்ந்தார், ராமர் எந்த இன்ஜினீயரிங் காலேஜில் படித்து பாலம் கட்டினார்? என்று நக்கல் அடித்த கலைஞரும் 95 ஆண்டு வாழ்ந்தார், மேடைகள்தோறும் பகுத்தறிவு மணம் கமழ உரையாற்றும் பேராசிரியர் அன்பழகனார் 98 ஆண்டுகள் வாழ்ந்தார். சமூக நீதிக்காகப் போராடும் சுயமரியாதைக்காரர்கள் எழுத்து பேச்சு என தங்கள் செயல்பாடுகளின் மூலமாக மட்டும் பகுத்தறிவுக் கருத்தைப் பரப்புவது இல்லை. அவர்கள் வாழ்ந்த கால அளவே பகுத்தறிவு பேசும். இங்கு கடவுளின் பெயரால் பயமுறுத்தி நிலை நிறுத்தப்பட்டிருக்கும் அத்தனை விழுமியங்களையும் அழிக்கத் துணிந்தவர்கள் நூறாண்டு நெருங்கி வாழ முடியும் என நிரூபித்தவர்கள் இவர்கள். அவ்வழியிலேயே பெரியாரின் மாணாக்கரும், அவராலேயே பேரறிஞர் என்று அழைக்கப்பட்டவருமான மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை இயக்கத்தின் நிறுவனர், தலைவர் வே.ஆனைமுத்து அவர்கள் தனது 96வது வயதில் காலமானார்.

ஆவணப்படுத்துதல் என்பது பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட ஒரு விஷயமாக பன்னெடுங் காலமாக இருந்ததால், இன்றளவும் அவர்கள் இவ்விஷயத்தைக் கோட்டை விட்டுக் கொண்டே இருக்கிறார்கள் என்று சிந்தனையாளர் காஞ்சா அய்லையா சொல்வார். வரலாற்றுத் தெளிவுடன் ஆவணப்படுத்துதல் என்பதன் முக்கியத்துவத்தை முழுதும் உணர்ந்தவராய் பெரியாரின் சிந்தனைகளைத் தேடித் திரிந்து சேகரித்து, அழகாய்த் தொகுத்து பெரியார் ஈவெரா சிந்தனைகள் எனும் 20 தொகுதிகள் அடங்கிய விலைமதிப்பில்லாப் பொக்கிஷத்தைத் தமிழ் மண்ணிற்கு வழங்கியதற்காகவே அய்யா ஆனைமுத்து தமிழர்களால் நன்றியுடன் நினைவு கூறத்தக்கவர். ஈவேரா சிந்தனைகள் புத்தகத்தின் பவுண்டட் அட்டையை தீண்டும் போதெல்லாம் இந்தப் பணியை காதலித்து செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணி வியப்பேன்.

அய்யா ஆனைமுத்து மேற்கண்ட பல முக்கிய சமூகப் பணிகளில் ஒன்று பெரியாரைத் தமிழ் நாட்டின் எல்லையை விட்டு இந்தியா முழுக்கக் கொண்டு சென்றது குறிப்பாக வடமாநிலங்களில் பெரியாரின் கருத்துகளைப் பரப்புரை செய்து சமூகநீதி அடிப்படையிலான இடஒதுக்கீடு பற்றிய விழிப்புணர்வை, வடமாநிலத்தவர்களுக்கு ஏற்படுத்தியது. அவரது அயராத உழைப்பு வட இந்தியத் தலைவர்களிடம் ஏற்படுத்திய எழுச்சி மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பெரும் பக்கபலமாய் அமைந்தது.

பார்ப்பன - பனியா சுரண்டல் கூட்டணியின் பிடியிலிருந்து விடுபட மொழிவழித் தேசிய இன உணர்வையும், பொதுவுடைமைச் சிந்தனைகளையும், அரசியலமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய பெரிய சீர்திருத்தங்களையும் தீர்வுகளாக முன்வைத்து அதை நோக்கி தன் இறுதிக்காலம் வரை அயராமல் பாடுபட்டவர் அய்யா ஆனைமுத்து அவர்கள்.

சிந்தனையாளன், பெரியார் ஈ.வே.ரா. போன்ற இதழ்களின் மூலமாகவும், தான் வெளியிட்ட பல அரிய நூல்களின் மூலமாகவும், பெரியாரிய அம்பேத்கரிய மார்க்சிய கருத்துகளைப் பரப்புரை செய்வதோடு, சுயமரியாதை வாழ்வியல் பயிற்சி வகுப்புகள் நடத்தி எதிர்காலத் தலைமுறை பெரியாரியலை வாழ்க்கை முறையாக மாற்றிக்கொண்டு பின்பற்றச் செய்வதற்கு அவர் மேற்கொண்ட முயற்சி அளப்பரியது.

அவரது மறைவு திராவிடர் இயக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரது நீண்ட வாழ்நாள் நமக்கு உணர்த்திய செய்தி ஒன்றுதான் அது

‘எல்லைகளை விரிவு செய், புதிய வழிமுறைகளைச் சிந்தி, சமூக மேம்பாட்டிற்காக இறுதி மூச்சு வரை இயங்கு’

வீரவணக்கம் அய்யா...

●

## பேரவையின் இறுதி மரியாதை



சென்னை தாம்பரம் இரும்புலியூரில் காலம் சென்ற ஐயா வே.ஆனைமுத்து அவர்களின் இல்லத்தில் 07-04-2021 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் தலைமையில் எழில்.இளங்கோவன், ‘பெல்’ ராஜன், உமா, மு.மாறன், இ.இளமாறன், தாம்பரம் மோகன், செந்தாமரை, அம்பத்தூர் ராஜு, மோகன்ராம், சாந்தசீலன், ராமகிருஷ்ணன், ஆரானை குமார் உள்ளிட்ட பேரவைத் தோழர்கள் ஐயாவுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,